Registered as a Newspaper

PAPER CLASS
PHYSICS:
திரு. சத்தியசீலன்
CHEMISTRY:
திரு. மக்லி
செவ்வாய் வியாழன்
2.30 — 4.30
விபரங்களுக்கு;-
New Master Institute
BMC Lane, Jaffna.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ-1/=

PAPER CLASS
சனி, ஞாயிறு
காலை 8.30—12.30
Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. இல்லைநாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure / Applied ]-Maths
-திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞு தை மீ 11 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ் பிறை 13 (24-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-58



★ சுற்றி வளைப்பு; ★ போராளிகள் - படையினர் மோதல்;
★ இரண்டு ஹெலிகொப்டர்கள் சேதம்; ★ காயமடைந்தோர் அ'புரத்துக்கு

# தெல்லிப்பளையிலும் வயாவிளானிலும் 17 பேர் மரணம்

## சுமார் 25 பேர் காயம்; 'மோட்டோ' தாக்குதலும் நடந்தது

—பலாலிச் செய்தியாளர் எஸ். கே. ராஜாவும்
அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜனும்—

யாழ்ப்பாணம், ஜன 24

தெல்லிப்பளை, கட்டுவன், வயாவிளான் ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம், விமானத் தாக்குதல், 'மோட்டோ ஷெல்' தாக்குதல் ஆகியவற்றால் பதினேழு பேர் பலியானார்கள். பல வீடுகள் சேதமுற்றன.

இதேவேளை தெல்லிப்பளையை நேற்றுப் படையினர் சுற்றி வளைத்த போது படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் சுமார் நான்கு மணி நேரம் நேரடி மோதல் இடம் பெற்றது

அப்போது இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் லோஞ்சர் தாக்குதலில் அவை சேதமடைந்ததாக அறியப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அவை அவசர அவசரமாக விமான நிலையத்தில் தரை இறக்கப் பட்டதாக அறியப்படுகிறது. அவற்றில் இருந்த படையினர் படுகாயமடைந்ததாகவும் அறியவருகிறது.

இந்த நேரடிச் சமரில் நான்கு சீருடையினர் மாண்டதாகவும் மற்றும் எட்டுப்பேர் படுகாயங்களுடன் அனுராதபும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் வயாவிளான் சந்தியாலும்: பலாலி பனைகளுக்கூடாகவும், பலாலி விமான நிலைய வீதிகளுக்கூடாகவும் சீருடைக்காரர் வந்தனர். கட்டுவன் - மயிலிட்டிச் சந்தியில் வாகனங்கள் போக முடியாது தடைகள் முன்பே போடப்பட்டு இருந்ததனால், நான்கு கவச வாகனங்கள் குரும்பசிட்டியின் மேற்குப் பக்கமாகவுள்ள 'மாயெரு ஒழுங்கையால் கட்டுவனை நோக்கிச் சென்றன.

மேலும் நான்கு கவச வாகனங்கள் பலாலி விமான நிலையத்துக்கு முன்பாகவுள்ள கிறேசர்

[4ஆம் பக்கம் பார்க்க]

**இறந்தோர் காயமடைந்தோர்**
**விவரம் 4ஆம் பக்கம்**

## அந்த நபர் யார்?

பலாலி, ஜன 24

நேற்று வயாவிளானில் நடந்த சம்பவம் ஒன்றின்போது அங்கு காணப்பட்ட சுமார் முப்பது சீருடையினரில் இலங்கையர் அல்லாத ஒருவரும் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நெடுத்த - வெள்ளைக்காரரைப் போன்ற நிறத்தையுடைய ஒருவர் நின்றார் என சீருடையினரிடம் அகப்பட்டு விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீதியால் வந்த நால்வரைப் பிடித்து அதில் இருவரைச் சுட்டனர்

பலாலி, ஜன. 24

நேற்று பலாலியில் இருந்து தெல்லிப்பளையை நோக்கி சீருடையினர் சென்றபோது வயாவிளான் சந்தியில் 'சென்ரி' ஒன்று போடப்பட்டிருந்தது.

சுமார் 30க்கு மேற்பட்ட சீருடையினர் தபால் நிலையத்தின் முன் வீதியில் உள்ள வீட்டினுள் நின்றனர்.

அவர்களில் சாதாரண உடையுடன் விவசாயி போலவும் சிலர் வீதியில் காணப்பட்டனர்.

அங்கு சீருடையினர் நின்றதை அவதானிக்காத சிலர் அவ்விடம் சென்றனர்.

அவர்களில் —

1. சுப்பிரமணியம் கதிர்காமநாதன் (வயது 31) சுருட்டுத் தொழிலாளி.

2. உடையார் மகா

(4ஆம் பக்கம் பார்க்க)

வயாவிளான், கட்டுவன், தெல்லிப்பளைச் சம்பவங்களில்காயம் அடைந்தவர்களில் சிலர் நேற்று யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவரைப் படத்தில் காணலாம்.

**சுபநேரம்**
**24.1.1986**
**வெள்ளிக்கிழமை**
சுபநேரம்:
6.36 முதல் 8.06 வரை
ராகுகாலம்:
11.06 முதல் 1.36 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## 'கொட்டியா' என்று சொல்லி என்னைச் சுட்டார்

### சசிகரனுக்கு நடந்த பயங்கரம்

-நல்லூர் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம்-

நல்லூர், ஜன 24

ஒளிந்து இருந்த சீருடை தரித்தவர் 'கொட்டியா' என்று சொல்லி என்னைச் சுட்டார்.

இறந்தவர்போல் கீழே விழுந்த என் மீது அவர் ஏறி நின்று கொண்டு பின்னர் நாலா பக்கமும் சுட்டுத் தள்ளினார்

சூட்டுக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட 19 வயதான வயிரமுத்து சசிகரன் மேற்கண்டவாறு சொன்னார்.

தொடை, கால் முதலியவற்றில் இவ

(4-ம் பக்கம் பார்க்க)

## மோதல் முடிந்தபின் கிணற்றடியில் நின்றோம் ஷெல் வந்து விழுந்து வெடித்தது

நல்லூர், ஜன. 24

மோதல் முடிந்து இரு தரப்பினரும் சென்று விட்டனர். அதன் பின்னர் வந்து கிணற்றடியில் விழுந்த ஷெல் வெடித்து எனது மைத்துனி இறந்துவிட்டார். எனது தங்கை காயம் அடைந்தார்.

காயம் அடைந்த பெண்ணின் சகோதரன்,

(4-ம் பக்கம் பார்க்க)

## பப்படத் தொழிற்சாலை சைக்கிள்கள் எரிப்பு

### வானுக்கு துப்பாக்கிச் சூடு

பலாலி, ஜன. 24

நேற்று கட்டுவன் சந்தியில் 'லக்கி இண்டஸ்ரீஸ்' எனப்படும் பப்படத் தொழிற்சாலையின் இயந்திரங்கள், சாதனங்கள், பப்படம் என்பன சேதப்படுத்தப்பட்டன.

தேயிலை, ரொபி, பப்படம் என்பன இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன.

உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட ரொபிகள், தேயிலை, பப்படம் என்பவற்றை தொழிற்சாலையின் உள்ளே போட்டுக் கொளுத்தினர். அங்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## முச்சந்திமுரளி



ஆர் எப்படிச் சொன்னாலும் ஜேர்மன் அரசாங்கத்துக்கு வேறு விதமாய் கதையைப் போட்டு இஞ்சத்தை அரசாங்கம் விஷயத்தைக் குழப்பத்தான் பாக்கும்

# பாதுகாப்பு வலயம் ரத்து இல்லை

கொழும்பு, ஜன. 24

1,000 மீட்டர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அவை இப்போதைக்கு ரத்துச் செய்யப்படமாட்டா.

உண்மையில் இது பாதுகாப்பு வலயம் மட்டும் அல்ல; எச்சரிக்கை வலயம் என்றே கூறவேண்டும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி சொன்னார்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

அந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது;

பாதுகாப்பு வலயம், வலயத்தினுள் வாழும் மக்களைப் பாதிக்காது, அன்றாட கருமங்களை அவர்கள் குறுக்கீடு இன்றி மேற்கொள்ள முடியும்.

தீவிரவாதிகள் கோட்டை இராணுவ முகாம் மீது மோட்டோ குண்டுகளால் தாக்கினர். அதில் ஒரு வீரர் கொல்லப்பட்டார். அதன்பின்னர்தான் பாதுகாப்பு வலயம் போடப்பட்டது.

தீவிரவாதிகள் முகாம் மீது தாக்கினால்தான் படையினர் திருப்பித் தாக்குவர்.

யாழ்ப்பாணம் பொது மக்கள் கைகளில்தான்

[4ஆம் பக்கம் பார்க்க]

# இலங்கைத் தமிழரை திருப்பி அனுப்பாதீர்!

## மேற்கு ஜெர்மன் அகதிகள் விவகார சபை வலியுறுத்து

மேற்கு பெர்லின், ஜன. 24

தமிழர் இலங்கையில் பொது இடங்களில் இம்சைப்படுத்தப்படுகிறார்கள், பெண்கள் கற்பழிக்கப்படுகின்றார்கள்.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக்கூடாது.

இப்படி மேற்கு பெர்லின் அகதிகள் விவகார சபை, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கு அனுப்பிய மகஜரில் கேட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனில் உள்ள இலங்கைத் தமிழர்களில் சிலர் விரும்பித் தாயகம் திரும்பினர், அவர்கள் அங்கு துன்புறுத்தப்பட்டுள்ளனர். விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே தமிழ் அகதிகள் விரும்பிச் சென்றாலும் சரி, திருப்பி அனுப்பப்பட்டாலும் சரி இலங்கையில் பொது இடங்களில் (பஸ், ரயில்) இம்சைப்படுத்தப்படுகிறார்கள் பெண்கள் மானபங்கஞ் செய்யப்படுகின்றனர்.

அங்கு அவர்களுக்கு உயிராபத்து ஏற்பட இடமுண்டு. எனவே ஜெர்மன் சமஷ்டி அரசு, தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக்கூடாது —

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 24

குருநகர் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் இருந்து இயந்திரப் பொருள்கள் சில அபகரித்துச் செல்லப்பட்டன.

## கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 24

மல்லாகம் நீதிமன்றத்தில் சைக்கிள் உட்பட நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த தடயப் பொருள்கள் நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டன

எப்போது, எப்போது என்று
நீங்கள் ஆவலுடன்
எதிர்பார்த்த
உதயனின் வாரமலர்
சஞ்சீவி
நாளை வெளிவருகிறது!
★ ★ ★
குடும்பம் முழுவதற்குமான
பல்சுவை விருந்து
அறிவுக்கு அருமருந்து
விலை: ரூபா 2.00
பிரதிக்கு முந்துங்கள்.

## குடியுரிமைச் சட்டம் ஒரே நாளில் விவாதித்து நிறைவேற்றப்படும்

### கூட்டத் தொடரை ஒத்திவைக்கும் திட்டம் ரத்து

கொழும்பு, ஜன 24

மலையகத் தமிழர்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கும் சட்டத் திருத்தத்தை ஒரே நாளில் விவாதித்து நிறைவேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவசரமாக சட்டத்தை நிறைவேற்றுதற்கு ஏதுவாக நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரைக் கலைப்பதை அரசாங்கம் திடீரென்று பின் போட்டுள்ளது.

குடியுரிமைச் சட்டத் திருத்த மூலம் ஜனவரி 31ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையினர் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீதேவியின் முதல் காதல் அனுபவம்

ஏ. வி. எம். ஸ்ருடியோ செட்டுக்கு வெளியே டைரக்டர் வலம்புரி சோமநாதவிடம் மணப்பெண் கோலத்தில் பேசிக்கொண்டிருந்தார் பிரபல நடிகை ஸ்ரீதேவி.

'கொல்' என்றசிரிப்பொலிகளுக்கிடையே, "சார்! சிவப்புக்கல் மூக்குத்தி படத்திலே இந்தவேஷம் எப்படி?" என்றார் ஸ்ரீதேவி. "வயதுக்கு ஏற்ற வேஷம்" என்றார் டைரக்டர்.

அருகிலிருந்த ஸ்ரீதேவின் தாயார் "அதெப்படி? என் பெண்ணுக்கு இன்னமும் பதினறு வயதே ஆகலேயே! திருமணத்துக்கு 18க்கு மேலல்லவா இருக்கணும்" என்றார்.

அம்மா சொல்வது சரிதான். சின்னப் பெண்ணாக நடித்த போது சரி ஆனல் இப்போது நான் நடித்து வருவது 16 வயதுக்கு மீறிய காரெக்டர்கள் தான்' என்றார் ஸ்ரீதேவி.

திரு.கே.பி அவர்கள் மூலம் 'மூன்று முடிச்சு', 'காயத்திரி', '16 வயதினிலே, 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' படங்கள் மூலம் திரையுலகில் கதநாயகியாக அறிமுகமாகிய ஸ்ரீதேவி தன் வயதுக்கு மீறிய வேஷங்களைத்தான் ஏற்றுநடித்தார்.

ஆனல், 'மச்சானைப் பாரத்தீங்களா', 'இளம்மனவி', 'சிவப்புக்கல் மூக்குத்தி' எல்லாமே நல்ல காரெக்டர்ரோல்கள்தான்.

திரையுலக தாரகையாக மின்னும் ஸ்ரீதேவி தனது காதல் நடிப்பு பற்றிய முதல் அனுபவத்தை சுவாரஸ்யமாக விளக்குகின்றார்.

இதனைச் சொல்லும்போதே ஸ்ரீதேவியின முகத்தில் ஒரு அலாதியான மலர்ச்சி.

பெங்களூரில் 'மூன்று முடிச்சு' — லவ்சீன், நான் காதலிக்கவேண்டும். எப்படிப் பேசுவது, எவ்வாறு நடிப்பது என்று தெரியவில்லை. காதல் உணர்வுடன் பேச முடியாமல் தவித்துப் போனேன்.

பார்வையில் கனிவுடன் புன்முறுவல்செய்தேன். 'றியலாக' அமையவில்லை. வாய், வசனத்தை உளறுகிறது உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

டைரக்டர் பொறுமையை இழந்து 'கட்' சொல்லிவிட்டார். "ஸ்ரீதேவி, நீ அடிக்கடி சினிமாப் பாரு; அதிலே வர்ற 'லவ்' சீன்களைக் கவனி" என்று என்னைப்பார்த்துச் சொல்லியும்விட்டார்.

அன்று முதல் லவ் சினிமாவையே விடாமல் பார்த்தேன் அதன் பலன், இன்று நான் காதல் காட்சிகளில் நன்கு பரிணமிக்கிறேன்.

இதை நான்சொல்லவில்லை. எனது ரஸிகர்களே கூறுகின்றார்கள்

இவ்வாறு ஸ்ரீதேவியின் காதல் காட்சிப் படப்பிடிப்பு ஆரம்பத்திலேயே களைகட்டி, இப்போது திரையுலக வானில் சிறந்த தாரகையாக மின்னி வருகின்றார்.

இவரது வயதுக்கு இவ்வளவு பெரியமுன்னேற்றம் அவரது திறமையே என்பதில் சந்தேகம் என்ன?

# இந்திய ராணுவம் உஷார்!

## குடியரசு தினத்தை முன்னிட்டு நடவடிக்கை

புதுடில்லி, ஜன. 23

இந்தியக் குடியரசு தினத்தை ஒட்டி, இந்திய இராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியாண மாநிலங்களில் பதற்றம் உச்சகட்டத்தை அடைந்து இருப்பதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

குடியரசு தினத்தன்று ஹரியாண மாநிலத்திற்குச் சொந்தமான சண்டிகார நகரின் ஒரு பகுதி, பஞ்சாப் மாநிலத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

அன்றையதினம் புதிய நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக சீக்கியத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானுடனன பிரச்சினைகளை இந்தியா படிப்படியாகத் தீர்க்கும்

புதுடில்லி, ஜன.23

பாகிஸ்தானுடனன பிரச்சினைகளை படிப்படியாக தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சொன்னர்.

பாகிஸ்தானுடனன உறவுகள் வேகமாகச் சீரடையவில்லை என்றும் பிரதமர் சொன்னர்.

பாகிஸ்தானுடனன ஒவ்வொரு பிரச்சினையையும் தனித் தனியாக பரிசீலனை செய்ய வேண்டும்.

இதனிடையில், சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக முக்கிய அம்சங்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் கருத்து வேறுபாடு கொண்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டது.

### தேர்தலை அவதானிக்க அமெரிக்கக் குழு

மணிலா ஜன.23

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி தேர்தலை அவதானிக்க அமெரிக்கபார்வையாளர் குழு ஒன்றை அமெரிக்க அதிகாரிகள் அனுப்புகின்றனர்.

பெப்ருவரி 7 ஆம் திகதி பிலிப்பீனஸ் ஜனதிபதி தேர்தல் நடைபெற உள்ளது.

அத் தேர்தலில் மோசடி இடம்பெறுவது பற்றி கண்காணிக்கவே அமெரிக்க குழு அனுப்பபபடுவதாக அமெரிககா கூறியுள்ளது.

### லெஸ்ஸத்தோ தூதுக் குழு

மசேறு, ஜன.23

லெஸ்ஸத்தோவில் நடந்து முடிந்த இரத்தம் சிந்தா அரசுக் கவிழ்ப்பைத் தொடர்ந்து அங்கு இரவு ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் லேகன்யா இராணுவ கவுன்சில் தலைவராக இருப்பார்.

அரசின் முதல் நடவடிக்கையாக தென்னபிரிக்க அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக தூதுக் குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

### ஜெனீவாவில் சோவியத்தும் அமெரிக்காவும்

ஜெனீவா, ஜன. 23

சோவியத் – அமெரிக்க 4 வது சுற்றுப் பேச்சுக்கள் ஜெனீவாவில் நடந்து முடிந்தது.

எனினும் மாநாட்டு முடிவுகள் பற்றி எதுவும் தெரிவிக்கப் படவில்லை என செய்திகள் கூறின.

### தொகை அதிகமாம் திருப்பி கொடுப்பாராம்

நியூயோர்க், ஜன. 23

லொத்தரில் பரிசாகக் கிடைத்த 3 கோடி டாலர் பணம், மகிழ்ச்சியைத் தராத பட்சத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடப் போவதாக ஒருவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பாஸ்குவல் கொன்சல்வோ (வயது 59) செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

இவருக்குத் தான் 3 கோடி டாலர் பணம் லொத்தரில் கிடைத்தது.

ஒருவருக்கு இத்தொகை மிக அதிகமானது- இப்படி திரு. கொன்சல்வோ சொன்னர்.

### ஹரியாணவில் 500 பேர் கைது

ஹரியாண மாநிலத்தில் எதிர்க் கட்சியின் எதிர்ப்புநடவடிக்கைகளை கருத்திற்கொண்டு அங்கு இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## வெளி உலகில்

# தென்யேமனில் சண்டை தீவிரம்

ஏடன், ஜன. 23

தென் யேமனில் தொடர்ந்து சண்டைகளும் குண்டு வெடிப்புகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

எந்தப் படையின் கட்டுப்பாட்டுக்குள் ஏடன் பகுதி இருக்கிறது என அறிய முடியவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனல் தென்யேமனிலிருந்து வெளிநாட்டவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லையெனக் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் கப்பலான 'பிரிட்டானியா' ஏடனிலிருந்து வெளி நாட்டவர்களைக் கொண்டு செல்ல எடுத்த முயற்சி சண்டையின் உக்கிரத்தால் தடுக்கப்பட்டுள்ளது.

ஏடனிலுள்ள சோவியத் தூதரகத்தில் வெளிநாட்டவர்கள் வந்து குழுமியுள்ளதாக அந்தச் செய்திகளில் மேலும் கூறப்பட்டது.

தென்யேமன் சோஷலிஸ்ட் அரசின் உள்மட்ட அதிருப்தியும் முரண்பாடுகளுமே இந்த சண்டைக்குக் காரணமாகக் காட்டப்படுகிறது.

தென்யேமன் ஜனதிபதி அலி நாசர் மொஹமட் எதியோப்பியாவிலிருந்து ஏடன் வந்துவிட்டதாக எதியோப்பிய தொலைக்காட்சி தெரிவித்ததாகச் செய்திகள் கூறின.

எனினும் தென்யேமனில் அவரின் நிலை என்ன என்பது இன்னும் கேள்விக்குறியாக இருப்பதாகவே நம்பப்படுகிறது.

போக்லாந்து சண்டையில் பயன்படுத்திய எச். எம். எஸ். ஹெர்மிஸ்:

# பிரிட்டிஷ் விமானம் தாங்கி கப்பலை இந்தியா வாங்கும்?

லண்டன், ஜன 23

பிரிட்டிஷ் கடற்படையின் விமானந் தாங்கிக் கப்பலான 'எச். எம். எஸ் ஹெர்மிஸ்' இந்தியாவுக்கு விற்கப்பட இருப்பதாக லண்டன் டைம்ஸ்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விமானந்தாங்கிக் கப்பலைத்தான் பிரிட்டிஷ் கடற்படை, போக்லாந்து யுத்தத்தில் பயன்படுத்தியது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தக் கப்பலை விற்க முயற்சிப்பதாகவும் இது குறித்து பேச்சுக்கள் நடத்த பிரிட்டிஷ் தூதுக்குழு ஒன்று புதுடில்லி செல்ல உள்ளதாகவும லண்டன் டைம்ஸ் செய்தி கூறுகின்றது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தியக் கடற்படைக்குழு லண்டன் சென்று இக்கப்பலை பரிசோதனை செய்தது.

71 கோடி டாலர் பணத்துக்கு இக்கப்பலை இந்தியா வாங்க எண்ணியிருப்பதாகவும் லண்டன் டைம்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவ முகாமை அப்புறப்படுத்து!

### யாழ். வர்த்தக சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். கோட்டையில் இருந்து இராணுவ முகாமை அப்புறப்படுத்தும்படி ஜனதிபதிக்கு யாழ். வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்து உள்ளது.

இதுசம்பந்தமாக சங்கம் அனுப்பிய மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயத்திற்குள் 5,000க்கு மேற்பட்ட பெரிய சிறிய வர்த்தக நிலையங்கள் இருக்கின்றன.

25,000க்கு மேற்பட்ட ஊழியர்கள் கடமை புரிகின்றனர்.

வகுப்புக் கலவரங்களினல் தென் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களே மிருசுவிலாசிரமத்தின் பேரில் யாழ். நகரில் வர்த்தகம் செய்கின்றனர். புதிய பாதுகாப்புவலயம் அவர்களுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்து உள்ளது.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள், தேசிய பாதுகாப்பு அமைச்சர், அமைச்சர் திரு. தொண்டமான், முப்படைத் தளபதி, யாழ்ப்பாணம் இணைப்பதிகாரி, யாழ் அரச அதிபர், இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## போராட்டத்திற்கு முழு ஆதரவு!

### பல்கலைக்கழக மாணவர் அவை முடிவு

யாழ்ப்பாணம், ஜன24

பாதுகாப்புவலயத்தை வாபஸ் பெறச் செய்வதற்காக வெகுஜன இயக்கங்கள் முன்னெடுக்கும் சகல போராட்டங்களுக்கும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அவை இப்படி முடிவு செய்திருக்கிறது.

அரசாங்கத்தின் முடிவுக்கு முழு எதிர்ப்பைத் தெரிவிப்பது என்றும் —

அன்னையர் முன்னணி யாழ் கச்சேரி முன்பாக நடத்தும்காலவரையறையற்ற மறியல் போராட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்குவது என்றும் அவை முடிவு செய்திருக்கிறது.

மினி சினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
Timothy Brent.
Tony Marcel,
Alan Corllians,
TORNADO
நவீன ஆயுதங்களைப் பாவித்துப் போராடும் மிகச் சிறந்த படம்

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# மரண பயத்துடன் வாழ்கிருேம்

### அன்னையர் முன்னணி மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 24

பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் மரண பயத்திக்கு மத்தியில் மக்கள் வாழ வேண்டியுள்ளது.

எனவே கோட்டை இராணுவ முகாமை உடனடியாக அகற்றிவிட வேண்டும்.

இப்படி அன்னையர் முன்னணி தனது மகஜரில் கூறயுள்ளது.

யாழ் பாதுகாப்பு வலயத்தினுள் வரும் பாடசாலைகளில் சுமார் 20,000 மாணவர் வரை படிக்கின்றனர்.

ஆயிரக்கணக்கானேர் அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்.

கனரக ஆயுதங்களைப் பாவிக்க பாதுகாப்பு வலய பிரகடனம், ஆயுதப் படையினருக்கு அனுமதி வழங்குகின்றது.

இந்த பதற்ற நிலைக்குக் காரணமான இராணுவ முகாம், யாழ் நகரின் மையத்தில் இருப்பது நியாயமற்றது.

எனவே கோட்டையில் இருந்து இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும்.

இப்படி அன்னையர் முன்னணி தனது மகஜரில் தெரிவித்துள்ளது.

## ஊர்காவற்றுறையை சேர்ந்த ஆசிரியர்கள்

### அங்கேயே பணியாற்ற வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து ஆசிரியர் பதவிக்குத் தெரிவானவர்கள் தமது தொகுதியில் உள்ள கஷ்டப் பிரதேசத்தில் பணிபுரிய விரும்பினல் அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படலாம்.

ஆசிரிய முன் பயிற்சி நெறியை முடித்துக் கொண்டுள்ள ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த அல்லது பிறப்பிடமாகக் கொண்டுள்ளவர்கள் அத்தொகுதியிலுளள நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் பணிபுரிய விரும்பின் அவர்களுக்கு உதவ கல்விச் சேவைகள் குழு முன் வந்துள்ளது.

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள ஆசிரிய பற்றாக்குறை நிலைமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கல்விச் சேவைக் குழுச் செயலாளர் எம். எச். எச். ஆரியரத்தினவுக்கு எடுத்து விளக்கினர். அதைத் தொடர்ந்தே இம்முடிவைக் கல்விச் சேவைக் குழு எடுத்துள்ளதாகத் தெரிவிக்கபபட்டுள்ளது.

### கிராமங்களிலும் கடை அடைப்பு

பண்டத்தரிப்பு, ஜன.24

பண்டத்தரிபபு, வடலியடைப்பு, மாதகல், அளவெட்டி, சங்கானை, பண்ணகம் ஆகிய இடங்களிலும நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் எல்லாம் அதிகாலையே பூட்டப்பட்டிருந்தன.

பண்டத்தரிப்பு வர்த்தகச் சங்கப் பிரதேசம் எங்கும் கிராமப்புறம் நகர்ப்புறம் என்ற பேத[illegible] பட்டிருந்தன.

சம்மாந்துறையிலும் ஊர்வலம்

## தொழில் நுட்பக் கல்லூரி கொள்ளையை ஆட்சேபித்து

அம்பாறை, ஜன 24

சம்மாந்துறைதொழில் நுட்பக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளையைக்கண்டித்து நேற்று கல்லூரி மாணவர்கள் பெரும ஊர்வலம் ஒன்றை நடத்தினர்கள்.

கல்லூரியிலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் நகரினூடாக சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை அடைந்தது.

ஜனதிபதிக்கு முகவரியிடபபட்ட மகஜர் ஒன்று சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப் பட்டது.

"ஆயுதப் புரட்சிக்கும் ஆவண எரிப்புக்கும் என்ன சம்பந்தம்?"

'நீங்கள் ஆளவேண்டுமானுல் எங்கள் கல்வி மாள வேண்டுமா?'

இந்தத் தொனியில் பல் வேறு கோஷங்கள் ஊர்[illegible] டன.

## கொள்ளை அடித்த பொருள்களைத் தர ஜிஹாத் கோரிக்கை

அம்பாறை, ஜன. 24

கொள்ளை இடபபட்ட மோட்டார் சைக்கிள், அரிசி முதலியவற்றை திருப்பித்தர வேண்டும் என்று கல்முனை ஜிஹாத் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த டிசம்பர் 29 இல் கல்முனையில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றையும் ஜனவரி 7ஆம் திகதி 268 மூடை அரிசியையும் இனந்தெரியாத நபர்கள் கொள்ளை இட்டுச் சென்றனர்

அப்பொருள்களைத் திருப்பித்தரக் கோரியே கல்முனை ஜிஹாத் இயக்கம் சுவரொட்டிகள் மூலம் வேண்டுகோள் விடுத்தது.

### விளா மரத்தில் வெள்ளை பாம்புகள்!

பண்டத்தரிப்பு, ஜன, 24

பண்டத்தரிப்பில் விளா மரம் ஒன்றில் அதிசய வெள்ளைப் பாம்புகள் காணப்பட்டன.

இந்த வெள்ளைப் பாம்புகளைப் பார்ப்பதற்காக அங்கு தினமும் பெரும் சனககூட்டம் கூடுகிறது.

ஆறும் வட்டாரம் கலைவாணி வீதியில் தம்பையா இந்திராணி என்பவரின் வீட்டு வளவில் உள்ள விளா மரத்திலேயே வெள்ளைப் பாம்புகள் மாலை வேளையில் தினமும் இரண்டு மணி நேரம வந்து நின்று விட்டுச் செல்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் தினமும் மாலை வேளைகளில் இந்தப் பாம்புகளைக்காணக் கூடிய தாக இருக்கின்றது.

நாடற்றவருக்குக் குடியுரிமை

## சிங்கள இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி

### சாஞ்சி பிக்கு கருத்து

கொழும்பு, ஜன.24

நாடற்றவருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க இலங்கை அரசு உடன்பட்டது,சிங்கள இனத்துக்குச் செய்யப்பட்ட பெரும்அநீதியாகும்.

இப்படி இந்தியாவில் உள்ள சாஞ்சி பௌத்த விகாரையின் பிரதம குருவண. ஹெடிகெல்ல பன்னதிஸ்ஸ மகா நாயக்க தேரர் கருத்து வெளியிட்டுள்ளார்.

மகாநாயக்க தேரர் மேலும் சொன்னதாவது;

இலங்கைக் குடியுரிமை வழங்க ஒப்புக் கொண்ட செயல் வேதனைக்கு உரியது.

சிங்கள மக்களுக்குச் செய்யப்பட்ட பெரும் அநீதி இது. சிங்கள மக்கள் வேறுபாடுகளை மறந்து இதற்கு எதிராகப் போராடவேண்டும்.

பௌத்த மகாசங்கத்தினர் ஒன்றுபட்டு இந்த அநீதியை எதிர்க்க வேண்டும்.

இப்படி மகாநாயக்க தேரர் குறிப்பிட்டார்.

மக்கள் முகம்



### நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,ஜன.24

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பாவனையாளர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திரு க. சபாபதிப்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்: உதவி அரசாங்க அதிபர், செயலாளர்செ. சண்முகதாஸன்: உபசெயலாளர் இரா. செல்வராசா, பொருளாளர்: அ சிங்கராசா, செயற்குழு: இ சிவரத்தினம, அ. நாகராசா, வ இராசலிங்கம், நா. குணசேகரம்.

## வடபிரதேச தொழிற் சங்கங்கள் ஊர்வலம் நடத்தும்

யாழ்ப்பாணம், ஜன.24

வெகுஜன அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த வடபிரதேச தொழிற்சங்கங்களின் தூதுக்குழு முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை இந்த ஊர்வலம் நடத்தப்படும்.

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை வாபஸ் பெறக் கோரியும், கோட்டை இராணுவ முகாமை அகற்றக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.

இது சம்பந்தமான எதிர்ப்பை, ஏனைய அமைப்புக்களுடன் சேர்ந்து தெரிவிப்பது என்றும் கூட்டுக் குழு நேற்று முன்தினம் மாலை தீர்மானித்தது.

கூட்டத்திற்கு கூட்டுக் குழு அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

எல்லா சமயக் கட்டுப்பாடுகளும், நாம் பிறருக்கு இன்னல் விளைவிக்காமல் காப்பாற்றுவதோடு நம்மை நம்மிடம் இருந்தே காப்பாற்ற விதிக்கப்பட்டவை. ஒவ்வொருவரும் இதைக் கவனத்தில் கொண்டு வாழ்வோமா!

— காஞ்சி முனிவர்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15, [illegible] ஒழுங்கை, [illegible] வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

24-01-86 த. பெ. 23


## புதிய உத்வேகம் உயிரற்றுப் போவதா?

வடபகுதியில் இராணுவ முகாம்களைச் சுற்றிப் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப் படுத்தப்பட்டதற்கு மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கிவிட்டார்கள்.

பேரணிகள், மறியல், கடையடைப்பு என்ற மும்முனைகளில் போராட்டம் நடந்து வருகிறது. யாழ்ப்பாணம் வாழ் முஸ்லிம் மக்கள் ஊர்வலம் நடத்தித் தமது எதிர்ப்பை முதலில் தெரிவித்தார்கள். அதைத்தொடர்ந்து கடைஅடைப்பு, மறியல்போராட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. மறியல் போராட்டம் நேற்றுமுதல் மற்றும் பல அரசாங்க அலுவலகங்களின் முன்பாக நடந்தன. அதனை வெளியூர்களுக்கும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு வலயத்தை ரத்துச் செய்விக்க வேண்டும் என்பதில் மக்களில் ஒரு சாரார் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஆர்த்து எழவேண்டும் என்ற ஒரு புதிய உத்வேகம் பிறந்திருக்கிறது.

எனினும் எல்லா மக்களும் அதில் ஈடுபாடு காட்டாதிருப்பது மிகவும் கவலைக்குரிய விஷயம்.

மக்கள் சக்தி மகா சக்தி. அதன் ஆற்றலும் தாக்கமும் சொல்லில் அடங்காதவை. அதனால் இயலாதது என்று சொல்வதற்கு எதுவுமில்லை.

பாதுகாப்பு வலய விவகாரத்தைப் பொறுத்தமட்டில், வடக்குத் தமிழ் மக்களின் எழுச்சி போதாது. அநியாயத்தை எதிர்க்கும்போது எல்லோரும் சேர்ந்து இயங்குவதால் மட்டுமே கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

இதனை எமது மக்களில் பலரும் உணர்வதாகத் தெரியவில்லை. எமது வழக்கமான கெட்ட குணம் இன்னும் அற்றுப் போகவில்லை.

எந்த விடயத்திலும் எம்மில் பெரும்பான்மையானவர்கள் பார்வையாளராகத் தான் இருக்க விரும்புகிறோம். இந்த ஒவ்வாத தன்மை எம்மை விட்டு அகன்றால் தான் தமிழ் இனத்துக்கு விடிவு. இல்லையேல் நாம் யுகாந்திரம் யுகாந்திரமாக அடிமைகளாக இருந்து அல்லற்பட வேண்டியது தான். அல்லது செத்து மடிய வேண்டியது தான்.

பாதுகாப்பு வலயத்துக்குக் காட்டப்படும் எதிர்ப்பு எங்கள் பிரச்சினையைச் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு கிடைத்த மற்றொரு நல்ல வாய்ப்பு.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் சக்தியைப் பொருட்படுத்தாது. எமது கோரிக்கையை நிறைவேற்றாது விடலாம். ஆனால் உலக அபிப்பிராயம் என்றோ ஒரு நாள், இந்த விவகாரத்தில் இல்லாவிட்டாலும் எங்கள் அரசியல் போராட்டத்துக்கு ஒரு பக்கத் துணையாக இருக்க உதவும்.

உங்களுக்கு வரும் காய்ச்சலுக்கும், தலையிடிக்கும் அடுத்தவர் மருந்து குடித்தால் தீர்ந்து விடுமா? நீங்கள் அப்படித்தான் செய்விக்கிறீர்களா?

உயிருக்கே ஆபத்தான நிலைமை வந்த பின்னரும் எம்மால் ஒரு காரியத்தை ஒன்று சேர்ந்து செய்யமுடியாவிலை என்றால் நாங்கள் விமோசனம் காண்பது எப்படி?

எமது முழுச் சக்தியையும் திரட்டி எதிர்ப்பைத் தெரிவிப்போமாக. அந்த உணர்வு எல்லோர் மனதிலும் வளர்வதாக. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வந்த உத்வேகம் உயிரற்றுப் போய்விடக்கூடாது.

## காட்டுப்புலத்தில் அரசினர் பாடசாலை

வட்டுக்கோட்டை, ஜன 24

தொழுநோயாளர்கள் பெரும் தொகையாகச் சீவித்து வரும் காட்டுப்புலம் என்னும் கிராமத்தில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மக்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் 43 மாணவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றி பாலர் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஆ. சுப்பிரமணியம் ஆசிரியர் இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலைக்குரிய காணியை வாங்குவதற்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரும் சுழிபுரம் சுகாதார அபிவிருத்திச் சபையினரும் பாஷையூர் திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள்மட சகோதரிகளும் அளவெட்டி ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினரும் உதவி புரிந்துள்ளனர்.

இப்பாடசாலைக்குரிய கட்டடத்தை அரசாங்கம் கட்டிக்கொடுத்துள்ளது. சுழிபுரம் பகுதியிலுள்ள காட்டுப்புலம் பாடசாலைக்கு பலவழிகளிலும் உதவி புரிய பொது ஸ்தாபனங்கள் பல முன்வந்துள்ளன.

# கோயில் வாசற் பூசைகள்: அவற்றின் நெறிகள், திறன்கள்

ஆலயம் என்ற சொல் ஆ-லயம் என்று பகுக்கலாகும். ஆ- பசு, இலயம் -ஒடுங்குதல். பசுத்துவமான சீவவர்க்கம் ஒடுங்குதலுக்குரிய குறியிடம் என்ற விரிபொருளை அஃதுடைத்தது. இலயம் -இலயதானம். இலயதானம் சிவதத்துதம். எனவே ஆலயம் என்ற சொற்றே இலயதானமாம் சிவதத்துவத்தைச் சுட்டி அமைவதாயிற்று எனலாம்.

இதன் மூலம் கோவின் இல்லம் சிவதத்துவமானது என்பதும் அவ் இல்லம ஆலயம் என்ற சிறப்புப் பெயருடையதாயிற்று என்பதும் பெற்றும். கட்டுண்ட உயிரினம் சிவதத்துவ மாதற்குரிய செம்மையை விளக்கிக் கொண்டிருக்கும் இணைவிடம், ஆன்மா அசுத்த மாயையை நீத்துச் சுத்த மாயை கொண்டு உயிர்ப்புறும் நிலையிடம் என்றுங் கொள்ளலாம்.

கோயிலினுள் நாம் சிறப்பாகக் கருதவேண்டிய குறியிடம் கோயில் மூர்த்தியாக உறைந்துள்ள ஆதிமூலச் சுச் சிற்றிடமே. இந்தச் சிற்றிடம் கோயிலமைப்பில் ஒடுக்கவியலான பகுதியாகும். இதனையே இலயதானம் - சிவதத்துவத்துக்குரியதென்றோம். சிவதத்துவம் அபரவிந்து என்ற நாதத்திற்குரியது. கோயிலின் ஒடுக்கவியலான சிற்றிடம் கருவறை என்றுங் கருதுவர். அவ்வறை நாதப்பொருள், எவ்வாறு அது நாதப்பொருள் என்பதை இனி ஆய்வாம்.

கருவறையாம் ஆதிமூலவிடத்தின் நீளம்- அகலம் - உயரம் என்றவையெல்லாம் அதிர்வுக் கணிப்புக் கணக்குக்கு ஏற்றமுறையாகவே கோயிற் கட்டடக்கலை நியமம் செய்யப்பட்டுள்ளது.

கருவறையில் ஒத்த அதிர்வுறும் காற்றுமண்டலம் ஒரு குறிப்பிட்ட அதிர்வு எண்ணுடைய ஒலிக்குப் பெரும் ஓசை எழுப்பவல்லது என்ற விஞ்ஞான முறைக்கேற்பவே அமைந்துள்ளதால் ஆங்கு எழுப்பப்படும் ஓம் என்ற ஒலிக்குக் கர்ப்பக்கிரகமாம் கருவறைக் காற்று மண்டலமும் ஒத்ததிர்வு அடைதலால் நாம் நாதப்பொருள் என்றோம். இன்னும் ஆதியிடக் கருவறையில் கால்கோள் செய்யும் மூர்த்திக்குரிய வடிவமாகும் கருப்பாறையு நாதமுடையதே.

கரடுமுரடான ஓசை எழும்பும் பாறைகளில் ஆண்மைத் தெய்வங்களும், இனிமையான மெல்லோசை மேவி எழும்பாறைகளில் பெண்மைத் தெய்வங்களையும் உருவாக்கும் நியமம் உள்ளதால் மூர்த்திப்பொருளும் நாதமே என்பதில் ஐயமின்று.

இவ்வாறு இடமும் இப்பொருளும் நாதஓசையில் இயைந்து இனித்தக் காட்சியிடமே கோயிற் கருவறை என்பதை மறந்து அவ்வறையை நாம் புதுக்குங்கால் மாபிள்வகைக் கற்களால் அமைத்து காற்றுமண்டல அசைவதிர்வு ஒத்துறாது ஏற்றத்தாழ்வாய் அசைகொள்ள ஆக்கிவிடுகின்றோம். புதுமையிற்றான் விஞ்ஞானம் பழைமையில் விஞ்ஞானம் ஏது? என்ற அறியாமையால் விஞ்ஞானத்தோடு தத்துவத்தையும் இழந்து ஈன சாதியினராய் இருக்கின்றோம்.

கருவறையும் கருவறை விளக்கமும், அவ்விளக்கத்தில் விளங்கும் வெளிப்பொருளும் என்ற இம் மூன்றும் ஒத்த ஒப்பு இணையிடமாய் இயைகையிலே கோயில் என்ற ஆதிமூலமாம் ஆலயம் தோற்றமாகும்.

இதில் ஒன்று ஒத்த ஒப்புக்கு ஒன்றுவிடின் கோயில் அல்லது ஆதிமூலமாம் ஆலயம் அரண்படாது என்பதை அறிமின்!

இன்று கருவறையின் விளக்கத்திற்கு இடப்படும் விளக்கு விளக்கப் பொருளா? வெளிச்சப் பொருளா? கருவறைக்கு விளக்கம் விதிக்கப்பட்டதே ஒழிய வெளிச்சம் விதிக்கப்படவில்லை. கருவறையில் ஒளிர்வும் ஒளிப்பும் ஆகிய இரண்டும் உடன் நிகழும் விளக்கமே நியதியாகும். வெளிப்பும் வெளிச்சமும் தரும் மின்சார விளக்கம் அந்நியதியைத் தருமா? வெளிச்சம் தரும் விளக்கு நம் முன்னோரிடத்தில் இருந்தது. ஆனால் அவை அங்கு அமைத்து அக்கருவறையையோ; கருவறையின் உரிப்பொருளையோ அழிபாடு செய்யக் கூடாது என்ற மேலான அறிவுடைமையால் விடுத்தனர். அவர்கள் அவ்வாறு விடுத்தது மூடத்தனம் என்று இன்று வெளிச்ச விளக்கிட்டு வேடிக்கை மாந்தராய் நிற்கின்றனர் இன்றைய கோயில் வினைவலர்.

மூலமூர்த்திக்கு எண்ணைக்காப்பிடல், பால், தயிர், தேன், இளநீர் போன்றவைகளால் நீராட்டல் ஏன்? அந்த நாத வடிவ உருவில் உட்கலந்த ஒளிமையும் ஒலிமையும் ஆங்கே அற்று ஒழியாது காப்பதற்கேயாம். இதுமட்டுமல்ல; கருவறையின் காற்று மண்டலத்தின் மின்னூட்டம் மிகுவதற்கும், வாயுவின் மூலக்கூறுகள் வளப்பமாதற்கும் உதவுதலாகும்.

மேலும், எதிர்மின்னூட்டமும் ஈரப்பதமும் உள்ள கருவறைக் காற்று மண்டலத்தில் ஒலியின் திசைவேகம் மிகுந்திருத்தலால் அர்ச்சகர் ஆங்கு புலன் அடங்கிப் புகலும் ஓம் முதலான மந்திரச் சொல் ஒலி மூர்த்தியில் பட்டு எதிரொலிக்கிறது.

இதனால் பெரு அலையையும ஒத்ததிர்வையும் கருவறைக்காற்று மண்டலம் பெறுகிறது. பிறவே அவைகளை ஈர்த்துத் தன்னுள் அடக்கும் வகையாகவே மூல மூர்த்தியின் படிமத் திருவுருவம் கோயிலின் தெற்கு வாயிலை நோக்கி எழுந்தருளியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மூலமூர்த்தியைப் பஞ்சலோகத்தால் வடித்தமைத்ததின் விஞ்ஞான நோக்கம் கருவறையில் கருக்கொண்ட பொருளை புலப்படுத்தல் என்க.

இத்தெற்கு வாயிலை நோக்கி வடபால் எழுந்தருளியான மூலமூர்த்தியின் பஞ்சலோகப்படிவம் புறப்பொருளாய் போகத்திறனில் போக மூர்த்தியாய்க் கோயில் முறையில் நேர்ந்த தத்துவமாம்.

மூலமூர்த்தியை வழிபாடு செய்தவர்கள், பூசனை இயற்றியவர்கள் அவற்றின் பயனைப் பெறவேண்டின் தெற்கு வாயிலை ஒளிவழிபாட்டில் முனைந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்று வேண்டும்போது தான் கிடைக்கும் என்பது சிவதத்துவத்தார் சிந்தனையாகும்.

பஞ்சலோக மூலப் படிமையானது கருவறையின் எதிர்மின்னூட்டம், பிராணவாயுவின் மூலக்கூற்றுத்தன்மை முதலானவைகளைத் தன்னுட் கொண்டு அப்பூசை மூலமும், அவ்வாயிலில் அமர்ந்திருந்து மூல மந்திரம் உள் நினைதல் மூலமும் நம்மை அறியாமலே புறப்புறப்பொருளாய் நம்மிடம் பொருந்தும் அருட்சியை அவர்களே தேர்வர்.

தெய்வ நம்பிக்கையும் பக்தியும் கொள்ளாதவர்கள் இந்த விஞ்ஞானக் கருத்துண்மையை உணரார்.

கோயிலின் நேர்வாயிற் பூசைத் திறன் தெற்கு வாயிற் பூசைத்திறன்களை இனியாவது எண்ணி அவைகளில் ஈடுபடுவாராக. இதிலிருந்து கோயிலின் இருவாயிற் பூசையில் நேர்வாயிற் பூசை ஆன்ம இலயத்திற்கும், தென்வாயிற் பூசை ஆன்ம போகத்திற்கும் உரிய வெவ்வேறான பூசை நெறிகள் என்பதைக் கோயில் காவலர்கள், கோயிலை வணங்குபவர்கள் தெளிந்து கொள்வாராக.

கோயில் தென்முக வாயிற்பூசையும் நேர் வாயிற் பூசைபோல் ஒத்த ஒப்பான சிறப்புமிகுபூசை என்று மனம் கொள்வோமாக. அத்துடன் முறையான மந்திர ஒலியை அர்ச்சகர் மூலமூர்த்திமுன் பொருந்தும் படியாகவும் உரைத்தல் இன்றியமையாத ஒன்று என்பதும் நாம் உணரல் வேண்டும்.

— புலவர் நா. சிவபாதசுந்தரனார் —



ஞானக்கதிர்

# அல்-அக்ஸா அழுகிறது
## பாங்கு என்னும் அதான் சொல்லக் கூடத் தடை

அது 'அல்-அக்ஸா' பள்ளிவாசல். அது 'பைத்துல் முகத்திஸ்' என்றும் அழைக்கப்படும். அல்குர்ஆன் அதை மேன்மைப்படுத்தியுள்ளது. மக்கா, மதீனா பள்ளிவாசல்களுக்கு அடுத்ததாக இடத்தைக் கொடுத்து மதிப்பவர்கள் முஸ்லிம்கள்.

நபி சுலைமான் (சக்கரவர்த்தி சொலமன்) அவர்களால் பூதகணங்களைக் கொண்டு அல் - அக்ஸா கட்டப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

அத்தகைய இந்த பள்ளிவாசல் இன்று யூதர்களுடைய ஆதிக்கத்தில் இருக்கிறது. இந்த யூதர்கள் அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர்கள். இவர்களின் முதாதைகள் பல தீர்க்கதரிசிகளைப் படுகொலை செய்தவர்கள். இறைகட்டளைகளுக்கு மாற்றம் செய்தவர்கள். ஈஸாநபி, தாவூத் நபி ஆகியவர்களால் சபிக்கப்பட்டவர்கள். அத்தகையவர்களுடன் முஸ்லிம்கள், முஸ்லிம்நாடுகள், கலை, கலாசார, பொருளாதார, வர்த்தகத் தொடர்பு வைத்திருப்பது இஸ்லாமிய சட்டப்படி குற்றமாகக் கருதப்படுகின்றது.

அதற்கு ஆதாரமாக அல்குர்ஆனில் அல்லாஹ் "விசுவாசிகளே! யூதர்களை உங்களுக்குப் பாதுகாவலர்களாக எடுத்துக்கொள்ளாதீர்கள். உங்களில் எவர் அவர்களை (த்தனக்கு) பாதுகாவலராக ஆக்கிக் கொண்டாரோ நிச்சயமாக அவனும் அவர்களில் உள்ளவர்தான்" என்று அத்தியாயம்:- அல்மாயிதா வசனம் 51இல் இப்படிக் கூறியுள்ளான்.

மேலும் அதே அத்தியாயத்தில் வசனம்64இல் "அவர்கள் சபிக்கப்பட்டு விட்டனர்" என்று விளக்கியுள்ளார். எனவே சபிக்கப்பட்ட, அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகிய அச்சமூகம் உலகம் அழியும்வரை முஸ்லிம்களின் எதிரிகளாகக் கருதப்படத்தக்கவர்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது யூத இனம் சர்வாதிகாரி ஹிட்லரால் துவம்சம் செய்யப்பட்டதை உலக சரித்திரம் கூறிக்கொண்டிருக்கிறது. பாவம் யூதர்கள் என்று உலக மக்கள் அனுதாபப்பட்டனர் ஆனால் சர்வவல்லமை பொருந்திய இறைவன் அல்லாஹ், அவனின் சொல் நாட்டம் அவர்களையிட்டு வேறு விதமாக இருக்கின்றது. அல்குர் ஆனில், அத்தியாயம் "அல-அஃறாப்" வசனம் 167-168 இல் அல்லாஹ் இப்படிக் கூறியுள்ளான் "(நபியே!) அவர்களுக்குக் (யூதர்களுக்கு) கொடிய நோவினை செய்யக்கூடியவர்களையே அவர்கள்மீது (ஆதிக்கம் வகிக்கும்படி) இறுதி நாள் வரையில் அவன் அனுப்பி வருவான் என்று உமதிறைவன் (அவர்களுக்கு) அறிக்கையிட்டதை (நீர் அவர்களுக்கு) ஞாபகமூட்டுவீராக!

நிச்சயமாக உம் இறைவன் தண்டிப்பதில் தீவிரமானவன். அவர்களை இப்புவியில் பலபிரிவுகளாகப் பிரித்து (பூமியின் பல பாகங்களிலும் சிதறடித்து) விட்டோம்." யூதர்கள் நாடிழந்தவர்களாக (இஸ்ரவேல் என் [illegible]) உலகின் பல [illegible] சிதறடிக்கப்பட்டிருந்தனர். இன்னும் இருந்து கொண்டிருக்கின்றனர். சர்வாதிகாரி ஹிட்லர் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக அனுப்பப்பட்டவன் என்பது குர்ஆன் கூறும் உண்மை.


அந்த இனம் இன்று ஜெருசலத்தைக் கைப்பற்றி அங்கு அமைந்திருக்கும் பைத்துல் முகத்திஸ் பள்ளிவாசலைத் தகர்த்து அவ்விடத்தில் ஒரு யூத கோயிலை உருவாக்க பாரியமுயற்சிஎடுப்பதாக ஜோர்தானிய பத்திரிகையான "அல்-தஸ்தூரில்" வெளி வந்த செய்தி கேட்டு முழு உலக முஸ்லிம் சமுதாயமே அதிர்ச்சியடைந்துள்ளது. இன்றும் அ பள்ளிவாசலின் பரிபாலனம் முஸ்லிம்களுடைய கையில், அந்தப பரிபாலனத்தையும் முஸ்லிம்களிடமிருந்து பறித்தெடுப்பதற்கு இஸ்ரவேல் முயற்சி எடுப்பதாக அப்பத்திரிகை குற்றம்சாட்டியுள்ளது.

அதை விடப் பெரிய அதிர்ச்சி தரும் விடயம் என்னவெனில் முஸ்லிம்கள் ஐந்து நேரம் வணக்கம் செய்பவர்கள். அதற்காக தினம் ஐந்து நேரம் "பாங்கு" அல்லது 'அதான" என்னும், அழைப்பு விடுக்கப்படுவது வழக்கம்.

இத்தகைய அழைப்பு விடும் ஏற்பாடு இறைவனால் வகுக்கப்பட்டதொன்று. முஸ்லிம்களின் "பாங்கு" என்னும் அழைப்பை இஸ்ரவேலர்களைத் தவிர உலகில் எந்த ஒரு சமுதாயமும் [illegible] குரல் கொடுத்ததாகவோ, [illegible] செய்ய முயற்சி எடுத்தாகவோ சரித்திரம் இல்லை.

"அல்-அக்ஸா" பள்ளிவாசலில் பாங்கு சொல்லப்படுவதை உடன் தடுத்து நிறுத்துமாறு "குத்ஸ்" பிரதேச பொலிஸ் திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக நம்பகமான ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

"பாங்கு" சொல்லப்



படுவதால் அங்கு இஸ்ரவேலர்களின் அமைதியான வாழ்வுக்குப் பங்கம் ஏற்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அந்த பாங்கின் அர்த்தம் என்ன? அல்லாஹ் பெரியவன் வணக்கத்துக்குரியவன், அவன் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள், வணக்கத்தின் பக்கம் வாருங்கள், ஜெயம் பெற வாருங்கள்" என்பதாகும். இது இஸ்ரவேலர்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றதாம். விந்தையிலும் விந்தை. விசித்திரமான குற்றச்சாட்டு.

அரபுப்பத்திரிகைகள் அன்னி விளாகின்றன. அரபு நாடுகள் ஓகோ என்று ஓங்காரமிடுகின்றன. ஆக்கபூர்வமான முயற்சி எடுப்பதாக இல்லை. திரை மறைவில் இஸ்ரவேலுடன் கூடிக் குலாவும் நிலை இன்றும் பைத்துல் முகத்திஸ் பள்ளிவாசல் இஸ்ரவேல் கையில் இருப்பதையிட்டு அழுது கண்ணீர் வடிப்பவர்கள் தென் கிழக்காசிய மக்கள். அவர்களுள் நாமும் அடங்குகிறோம்.

நிச்சயமாக எங்கள் கண்ணீர், எங்கள் கவலை, எங்கள் வேண்டுகோள் வீண் போகாது. அல்லாஹ்வின் சொல் பலித்தே தீரும். அவன் பிடியில் அவர்கள் என்ற நிம்மதி மட்டும் தான் எங்களிடம் உண்டு. காலத்தின் கையில் பதில் நிச்சயம் உண்டு.

— அருமது கரீம் அக்பர் ஜின்னு



### பொய்யாமொழி

குறள்:
பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

பொருள்:
கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யப் பெற்றால் மகளிர் பெரிய சிறப்பை உடைய மேலுலக வாழ்வைப் பெறுவர்.

## விரிவுரையாளர் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியஐயர் கலாநிதிப் பட்டம் பெற்றதைக் கெளரவிக்கும் பொருட்டு பாராட்டு விழாவை கீரிமலை சிவநெறிக் கழகம் நடத்தியது.

'முள்ளியவளைப் பிரதேசத்தில் உருவாகிய முதல் கலாநிதி திரு. சுப்பிரமணியஐயர்.

அவர் நவீன இலக்கியக் கூறுகளை ஆராய்ந்துள்ள அதேவேளையில் பழைய இலக்கிய மரபுகளையும் பேணிப் போற்றுகிறார்".

— இவ்வாறு திருமதி கோகிலா மகேந்திரன் பாராட்டினார்.

கீரிமலை சிவநெறிக் கழகச் செயலாளர் திரு. ச. விநாயகரத்தினம் தலைமையில் குப்பிளான் சிவமகாலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

### சமய சந்திகளில்

#### பிரார்த்தனை

கொடிகாமம், ஜன. 24

யாழ் மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கும் அட்டூழியங்கள் ஒழிய வேண்டும் என்று கோரி பிரார்த்தனையும் திருவாசக முற்றோதலும் மட்டுவில் விளைவேலி மருதடி விநாயகத்திப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை அதிகாலை 6 மணி முதல் இது நடைபெறும்.

தென்மராட்சி சைவ மகாசபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்வர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்ரனுவை சரியான முறையில்
பொருத்திக் கொள்ளுங்கள்
வடமாகாணத்தின் அதிசிறந்த
அன்ரனுவை பொருத்துபவர்கள்
வீ ன ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் படமாளிகை முன்பாக)

உதயன்

24 01-1986

வீ ன ஸ்
டெக், T.V.
றேடியோ, 2 IN I
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள
VINUS
266 1 Stanly Road, Jaffna.
(Opp. Srithar Theatre)



யாழ் உதவி அரச அதிபர் பணிமனையின் முன் மறியலில் ஈடுபட்ட அன்னையரில் ஒரு பகுதியினரை முதலாவது படத்தில் காணலாம். யாழ் செயலகத்தின் முன் அன்னையர் முன்னணித் தொண்டர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# நேற்று மேலும் இரு அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதம்

## மாணவ, மாணவியரும் பெருமளவில் பங்குபற்றினர்

— உதயன் செய்தியாளர்: சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஜன 24 யாழ்நகரில் மறியல் போராட்டம் நேற்றும் நடந்தது.

மேலும் இரண்டு அரச அலுவலகங்களுக்கு நேற்றுப் போராட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் யாழ் செயலகத்தின் முன்றலில் மட்டும் மறியல் நடத்தி வந்த அன்னையர் முன்னணி, யாழ் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாகவும் தனது போராட்டத்தை நேற்று ஆரம்பித்தது.

நல்லூரில் உள்ள யாழ் மாவட்ட கல்வித்திணைக்கள அலுவலகத்தின் முன்பாக சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகம் தனது மறியல் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தது.

இதில் பாடசாலை மாணவ மாணவியரும், சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தில் வசிக்கும் இடம் பெயர்ந்தோரும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

யாழ் செயலகத்தின் முன் அன்னையர் முன்னணி, நல்லூர் தமிழ் மகளிர் அவை, பாடசாலை மாணவ மாணவிகள், பொது மக்கள் உட்பட நூற்றுக்கணக்கில் மக்கள் மறியலில் ஈடுபட்டனர்.

காலை 9 மணிக்கு யாழ் செயலகம் வந்த அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் அன்னையர் முன்னணி மகஜர் ஒன்றை சமர்ப்பித்தது.

இன்று மறியல் போராட்டம் மேலும் சில அரச அலுவலகங்களுக்கு விஸ்தரிக்கப்படும்

சனி, ஞாயிறு, விடுமுறை தினங்கள் தவிர்ந்த மற்றைய தினங்களில் மறியற் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

### குண்டு செய்த வம்பு

கொழும்பு, ஜன. 24 பொரளையில் இடம் பெற்ற பார்சல் புரளி! கடந்த செவ்வாய் மாலை பொரளைச் சந்தியில் பார்சல் ஒன்று அநாதரவாகக் கிடந்ததை அயலவர்கள் கண்டனர்.

பதறியடித்துக் கொண்டு அருகில் இருந்தவர்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

பொலீஸார் அந்த இடத்துக்கு விரைந்து வந்து, தூரத்தே நின்று பார்சலை நோக்கிச் சுட்டனர்

துணிமணிகள் தான் பார்சலினுள் இருந்தது அப்பொழுது தெரிய வந்தது.

### பாதுகாப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாம் தங்கியுள்ளது.

தீவிரவாதிகள் மோட்டோர் குண்டுகளால் காவலகளைத் தாக்காமல் யாழ்ப்பாண பொதுமக்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அந்த நிலை ஏற்பட்டால் பாதுகாப்பு வலயமே தேவையாகாது.

அப்பாவி மக்கள் மீது பாரிய ஆயுதங்களைக் கொண்டு ஆயுதப்படையினர் தாக்குதல் நடத்த வேண்டும் என்பதற்காக அல்ல, தீவிரவாதிகள் மோட்டோர் குண்டுகளால் படையினரைத் தாக்குகின்றனர்.

தீவிரவாதிகளுக்கு அப்பாவி மக்கள்பற்றி அக்கறையில்லை.

பாதுகாப்பு வலயம் பிரகடனஞ் செய்யப்பட்ட பின்னர், தீவிரவாதிகள் மோட்டோர் குண்டு பாவித்து படையினரைத் தாக்கவில்லை.

பாதுகாப்பு வலயம் எல்லாம் பாதுகாப்பு தந்திர நடவடிக்கைகள். இது பற்றி எல்லாம் பிரஜைகள் குழுக்களுக்குச் சொல்லமுடியாது.

யாழ் மக்களின் நலன் கருதியும்தான் பாதுகாப்பு வலயம் பிறப்பிக்கப்பட்டது.

பயங்கரவாதத்துக்கு இராணுவத் தீர்வுதான் காணப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் முக்கியம்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

### குடியுரிமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்.

அதனையடுத்த தினமே சட்ட மூலம் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு ஏதுவாக நாடாளுமன்றத்தின் நிலையியற் சட்டங்கள் ரத்துச் செய்யப்படும்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரைக் கலைத்து அடுத்த கூட்டத் தொடரில இச் சட்டமூலத்தைக் கொண்டுவர அரசு முன்னர் எண்ணியிருந்தது.

இச் சட்ட மூலம் கொண்டு வரப்படுவதற்கு சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, மகாசங்கம் ஆகியன பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளன,

இதை விட மக்களைத் திரட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவை உத்தேசித்துள்ளன.

நீண்ட இடைவெளி விட்டு சட்டமூலத்தைக் கொண்டு வந்தால் நாட்டில் கொந்தளிப்பு நிலைமை உருவாகும் என்று கருதியே அவசர அவசரமாக ஜனவரி 31 இல கொண்டுவந்து நிறைவேற்ற ஆளுங்கட்சியினர் முடிவு செய்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டதா என்பதைப் பரிசிலனை செய்வதற்காக இச் சட்ட மூலம் இன்று அல்லது நாளை உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படலாம் என்று தெரிகின்றது.

### கொட்டியா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குக் காயங்கள் ஏற்பட்டன.

சசிகரன் மேலும் சொன்னதாவது;

காலை 10 மணிக்கு நண்பனுடன் சேந்தாங்குளத்தில் இருந்து சைக்கிளில் வந்து கொண்டு இருந்தேன். அச்சமயம் ஒரு கடபத்துக்கு அருகில ஒளிந்து இருந்த சீருடை தரித்த ஒருவர் 'கொட்டியா' என்று கத்தியபடி எமமை நோக்கிச் சுட்டார்.

அப்பொழுது நான், வீரர் நின்ற இடத்தில் இருந்து 10 யார் தூரம தள்ளியே நின்று கொண்டிருந்தேன். சூடு வாங்கிய நான் சைக்கிளைப் போட்டுவிட்டு செத்தவன் போல் கீழே விழுந்து கிடந்தேன்.

அப்பொழுது என்னை நோக்கி வந்த சீருடை அணிந்திருந்தவர் எனது வயிற்றைத் தடவிப் பார்த்தார். பின்னர் எனது முதுகில் ஏறிநின்று கொண்டார். அதன் பின்னர் நாலு பக்கமும் சுடத்தொடங்கினார்.

10 நிமிடங்கள் இந்த நிலையில் நின்று கொண்டு சுட்டார் அதன் பின்னர் அவர் இறங்கிச் சென்று விட்டார். நான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டேன்--

இப்படி சசிகரன் சொன்னார்.

### 'மோதல்...

உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு சொன்னார்.

மயிலங்கேணியில் இச்சம்பவம் நேற்று நடந்தது.

படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல் நடந்தது. இருதரப்பாரும் அவரவர் இடத்துக்குத் திருப்பிவிட்டனர்.

பின்னர் என் மைத்துனி, தங்கை, அயலவர்களுடன் கிணற்றடியில் பேசிக்கொண்டு நின்றோர்கள் அப்போது இஸ்... என்ற சத்தத்துடன் தீபபிழம்பு போன்று ஒரு பொருள் வந்து விழுந்து வெடித்தது.

இக்குண்டு பல பனைமரங்களையும் முறித்துச் சேதமாக்கியது.

இப்படி அவர் சொன்னார்.

### பப்படத் தொழிற்சாலை...

ருந்த 3 சைக்கிள்கள் எரிக்கப்பட்டன. தொழிற்சாலை முற்றாக எரிந்து விட்டது.

தொழிற்சாலையில் நின்ற விநியோக வான் ஒன்றுக்கு 21 துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன. இவ்வாகனம் எரிக்கப்படவில்லை.

இத்தொழிற்சாலையுடன் இணைந்த வீடும் துப்பாக்கியால் சுடப்பட்டு சேதப்படுத்தப்பட்டது ஆனால் வீடு [illegible] னால் அணைக்கப்பட்டது.

### தெல்லிப்பளையிலும...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஒழுங்கை வழியாக கட்டுவனை நோக்கிச்சென்றன.

**எட்டும் சேர்ந்தன**

எட்டு கவச வாகனங்களும் கட்டுவனில் உள்ள குரும்பசிட்டி - மல்லாகம் சந்தியில் சேர்ந்துகொண்டன.

நடை பவனியாக வந்த சீருடையினர் முன் சென்று வேலிகளைப் பிரித்தபடியும் வீதியாலும் வீதியின் இருமருங்காலும் தெல்லிப்பளை வைத்தியசாலைப் பக்கமாகச் சென்றனர். செல்லும் போதே மேலே சுட்டபடி சென்றனர். கட்டுவன் - மயிலிட்டி - மல்லாகம் சந்தியில் வீதியால் வந்த ஒருவர் சூடுபட்டு அந்த இடத்திலேயே மரணமானார்.

தொடர்ந்து சரமாரியாகச் சுட்டபடி அவர்கள் முன்னேறினர். இடைக்கிடை கிரனேட் வெடிகள் ஆங்காங்கே வெடிக்கும் சத்தம் கேட்டது

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு அப்பால் ரயில் வீதி வரைக்கும் சீருடையினர் சென்றனர். மேலாக ஹெலிக்கொப்டர் வட்டமிட்டபடி பாதுகாப்பு அளித்தது.

தெல்லிப்பளையிலுள்ள வீடுகளைப் படையினர் சோதனையிட்ட பொழுதே ரேடிச்சமர் ஆரபித்தது.

ஆரம்ப கட்டத்தில் வானத்திலிருந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்த கறுப்பு நிற ஹெலிக்கொப்டரை நோக்கிப் போராளிகள் ரொக்கட் லோஞ்சர் மூலம் பலமாக தாக்குதலை மேற்கொண்டனராம்.

அது அபாயகரமான நிலையில் பலாலி முகாமில் தரையிறக்கப்பட்டதாகவும் அதில் கடமையிலிருந்த மூன்று இராணுவ வீரர்கள் உடனடியாக அவசர சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. விமானத்தின் எஞ்ஜின் பகுதி சேதமடைந்ததாக சொல்லப்படுகிறது.

மற்றொரு விமானம் லோஞ்சர் சூடுபட்டு எரிந்த நிலையில் பலாலி விமான நிலயத்தில் தரை இறக்கப்பட்டதாகவும் அதில் இருந்த மூவர் மயக்கமுற்று விழுந்தார்கள் எனவும், அவர்களும் அனுராதபுரத்துக்கு விரையப்பட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

வறுத்தலைவிளானில் ஹெலிக்கொப்டர் சுட்ட அடையாளம் வீதியிலும் மரங்களிலும் காணப்படுகின்றன.

சீருடையினர் பலாலியை நோக்கித் திரும்பினர். திரும்பும்போது ஒரு பப்படத் தொழிற்சாலை உட்பட 24 வீடுகள் சேதப் படுத்தப்பட்டன. பெரிய வீடுகள் இரண்டிற்கருகில் 15 நிமிடமளவில் நின்ற படியே சுட்டும் கல்லால் எறிந்தும் மதிலை இடித்து விழுத்தியும் சேதமாக்கியபடியே விமான நிலைய வீதிவழியாகத் திரும்பிச் சென்றனர்.

எனினும் பின்னர் நண்பகல் 1-30 மணிபளவில் விமானங்கள் மீண்டும் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

### வீதியால்...

1 ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவன் (வயது 30) கூலித் தொழிலாளி.

3. வல்லிபுரம் கந்தசாமி (வயது 51).

4 மிக்கல் உடையார் பரிபூரணம் (தோலகட்டியைச் சேர்ந்தவர்)

என்பவர்கள் சீருடையினரிடம் அகப்பட்டனர்.

அவர்களில் வல்லிபுரம் கந்தசாமி என்பவரை அவ்விடத்தில் இருக்கும்படி கூறிவிட்டு ஏனைய மூவரையும் சில சீருடையினர் முகாம் பக்கம் அழைத்துச் சென்றனர்.

அவர்களில் மிக்கல் உடையார் பரிபூரணத்தைத் தவிர ஏனைய இருவரும் திருப்பி அழைத்து வரப்பட்டனர்.

தபால் நிலையத்துக் கண்மையில் வைத்து இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவ்விடத்திலேயே தலையில் சூடுபட்டு சுருண்டு விழுந்தார். உடையார் மகாதேவன் கடுங் காயத்துக்கு உள்ளானார். அவர் உடனடியாக யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இத்தகவலை அவ்விடத்தில் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு விடப்பட்ட திரு. வல்லிபுரம் கந்தசாமி உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்

### அந்த நபர்....

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பட்ட ஒருவர் கூறினார்.

இந்த வெள்ளை நிறத்தவர் எதுவித மொழியையும் பேசவில்லை என்றும், கையால்மட்டும் சைகை காட்டினார் என்றும் கூறப் படுகிறது.

அவர் 'பொசாட்' அல் [illegible] யவராக இருக்கலாமென [illegible] படுகின்றனர்.

## இறந்தோர்

பலாலி, ஜன. 24 நேற்றைய சம்பவங்களில் மரணமானோரில் சிலரின் விவரம் வருமாறு –

1. சுப்பிரமணியம் கதிர்காமநாதன் (வயது 31) இவர் சுருட்டுத் தொழிலாளி. வயாவிளானைச் சேர்ந்தவர். நெற்றியில் சூடுபட்டு இறந்தார்.

2. வல்லிபுரம் நமசிவாயம் (வயது 36) கட்டுவனைச் சேர்ந்தவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை கூலித் தொழில் செய்பவர் இடுப்பிலும், நெஞ்சிலும் சூடுபட்டு இறந்தார்.

3 இராமன் (சின்னட்டி) (வயது 71) தலையிலும்-நெஞ்சிலும் சூடுபட்டு இறந்தார்

4. வரதராஜப் பெருமாள் (வயது 50) தையிட்டி நகுலேஸ்வரா வித்தியாசாலையின் அதிபர். வயிற்றிலும், தலையிலும், இடுப்பிலும் சூடுபட்டு இறந்தார்.

5. இனம் தெரியாத ஒருவர் (இவரின் சடலம் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளத) பிடரியிலும், முதுகிலும் சூடுபட்டு இறந்தார்.

6. ஆறுஸ் செந்தில் குமாரி (வயது 26) மண்டை பிளந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மரணமானார்.

7. செந்தில்குமாரி (17 வயது)

8. இ. தம்பிராசா (30 வயது)

9. ராமன் தேவன் சிவந்தன் (வயது 5) விமன்காமத்தில் வீட்டில் விழுந்த ஷெல்லினால் இறந்தார்.

10. இராசேந்திரம் (வயது 38) 5 பிள்ளைகளின் தந்தை

11 மகாலிங்கம் (35 வயது) 4 பிள்ளைகளின் தந்தை இருவரும் தச்சுத் தொழில் செய்பவர்கள்.

**மூவர் தப்பினர்**

நேற்று தெல்லிப்பளை வந்த சீருடையினர் மூன்று ஊழியர்களைத் துப்பாக்கி முனையில் வைத்து விசாரித்தனர்.

அவர்களின் அடையாளக் கார்ட்டைப் பார்த்தும் திருப்திப்படாத அவர்கள் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரியை அழைத்தனர்.

அவரிடம் மேற்கூறிய மூவரையும் வைத்தியசாலை ஊழியர்கள்தானா என்று விசாரித்தனர்.

வைத்திய அதிகாரியின் உறுதிப்பாட்டிலும் கூற்றிலும் திருப்தி அடைந்த சீருடையினர் அம்மூவரையும் விடுவித்தனர்.

## காயமடைந்தோர்

பலாலி, ஜன 24 நேற்று வயாவிளான், தெல்லிப்பளையில் நடந்த சம்பவங்களில் சுமார் 25 பேருக்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்களில் சிலரின் விவரம் வருமாறு:–

1. விஜயகுமார் (25 வயது) காலில் சூடு

2. சிவகுரு அரிச்சந்திரா. (34 வயது) கட்டுவனைச் சேர்ந்தவர். காலில் சூடு

3 சிராளன் தவமணி. (29 வயது) தெல்லிப்பளையைச் சேர்ந்தவர் கையில் சூடு

4. செல்வி குமார குலசிங்கம் விஜயலக்சுமி. (24 வயது) தொடையில் சூடு.

5. திரு. ஜோர்ஜ். (22 வயது) காலிலும் தொடையிலும் சூடு.

6. இராசையா அசோக்குமார். (22 வயது) கடுமையான காயங்களுடன் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதி.

7. ஜி ரவி (22 வயது) காலில் சூடு

யாழ் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் சேர்க்கப்பட்டுள்ள பெண்கள் வருமாறு:–

8. முருகேஷ் பிரேமராணி (23 வயது) கை மூட்டில் காயம்.

9. எஸ். ஞானசோதி. (28 வயது)

10. எம். சந்திரபுஷ்பா (30 வயது) இடுப்பில் காயம்.

காயம் அடைந்த ஏனையோர் விவரம் உடனடியாகக் கிடைக்கவில்லை.

வியாழமாற்றம்

வியாழமாற்றம் 24. 1. 1986.
பன்னிரு ராசிகளுக்கும் பலன்களுடன் இரகுநாதையர் அவர்களின் மாத வெளியீடான
‘சோதிட பரிபாலினி’
இதழுடன் கூடியது.
விலை ரூபா 3.00
கிடைக்குமிடம்:
சோதிட விலாஸ புத்தகசாலை,
46, பெரியகடை, யாழ்ப்பாணம்.
மற்றும் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

கார் ஓட்டுநர் தேவை

அனுபவமும், நேர்மையும் நற்பழக்கமுமுள்ள 50 வயதுக்கு மேற்பட்ட கார் ஓட்டுநர் வீட்டில் தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு வேண்டப்படுகிறார் உணவு, இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். முன் அனுபவங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.
நா. ஜெயரஞ்ஜிதன்,
ஷப்ரு
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

DIPLOMA IN NURSING
தாதிப் பயிற்சியில் டிப்ளோமா
பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் முடிவுற்று தாதிப் பயிற்சிக்கான விரிவுரைகள் விரைவில் ஆரம்பம்
விசேட ஆங்கில வகுப்புகளும் பயிற்சிக் காலம் வரை இலவசமாக நடத்தப்படும்.
உள்ளூர், தனியார் ஆஸ்பத்திரிகளிலும் வெளிநாடுகளிலும் இலகுவான வேலை வாய்ப்பு!

DIPLOMA IN PHARMACY
பாமஸி பயிற்சி அத்துடன் செய்முறைப் பயிற்சியும் ஆரம்பம்
1st Feb. 1986
External Exam Sri Lanka.
இற்கு பயிற்றப்படும்.
பாமஸிகளிலும், வெளியூரிலும் வேலை வாய்ப்புப் பெற இலகுவான பயிற்சி.

DIPLOMA IN MOTOR MACHANISUM & RADIO T.V.
தொழில் பயிற்சியில் டிப்ளோமா கற்க இலகுவான வாய்ப்பு.
றேடியோ T.V. டெக்
திருத்த செய்முறை வகுப்புகளுடன் அடங்கிய இலகு பயிற்சி உடன் ஆரம்பம்.

North Ceylon Technical Institute
14, St. Peter's Lane, Hospital Road
JAFFNA. T'Phone: 24355

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு மா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீட்டு திகதி 24-01-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org